### தனியார் பள்ளிக்கு அனுமதி:

# ரூ.100 கோடி மோசடி வழக்கில் தி.மு.க. நிர்வாகி உறவினர் 2 பேர் கைது

**சென்னை, ஜூலை.25–** தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் ரூ.100 கோடி மோசடி செய்யப்பட்ட வழக்கில் மேலும் 2 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் பல்வேறு தனியார் பள்ளிகளிடம் அங்கீகாரம், தரம் உயர்வுக்கான அனுமதி போன்றவற்றை பெற்றுத் தருவதாக கூறி ரூ.100 கோடிக்கு மேல் மோசடி செய்ததாக பதியப்பட்ட வழக்கில் சாலிகிராமம் மெஜஸ்டிக் காலனியில் வசிக்கும் தி.மு.க. நிர்வாகி பி.டி.அரசகுமாரை (வயது 59) கடந்த 27–ம் தேதி சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கைது செய்தனர். மதுரை, சோலை அழகுபுரத்தை சேர்ந்த ஆரோக்கியராஜ் (எ) ராஜா (39), திருச்சி ஸ்ரீரங்கத்தை சேர்ந்த சுரேஷ் (49) ஆகியோர் அரசகுமாருக்கு ஆதரவாக செயல்பட்டது தெரியவந்தது. இவர்கள் அரசகுமாரின் உறவினர்கள் ஆவர்.

பள்ளிகளுடன் எந்த தொடர்பும் இல்லாத அவர்கள், அரசகுமார் மற்றும் அவரது கூட்டாளிகளின் தூண்டுதலின்பேரில், பள்ளி நிர்வாகிகளை பல்வேறு இடங்களில் வரவழைத்தனர்.

இதையடுத்து இருவரையும் நேற்று கைது செய்துசிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் இதுவரை 120–க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட பள்ளி நிர்வாகிகள் உள்பட 190 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

### சிறுநீரக மோசடியில் ஈடுபட்ட

# மருத்துவர்கள் விவரம் விரைவில் வெளியிடப்படும்

## அமைச்சர் அருண்ராஜ் தகவல்

**சென்னை, ஜூலை.** 25 சிறுநீரக மோசடியில் தொடர்புடைய மருத்துவர்களின் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என அமைச்சர் டாக்டர் கே.ஜி. அருண்ராஜ் தெரிவித்தார்.

பொதுவாக, மூளைச்சாவு அடைவோரிடம் இருந்து பெறப்படும் உறுப்புகள், தானம் கோரி ஏற்கெனவே பதிவு செய்தவர்களுக்கு உரிய வரிசைப்படி வழங்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதில் மாநில உறுப்பு மாற்று ஆணையத்துக்கு முழு அதிகாரம் உள்ளது. அதே வேளை, உயிருடன் இருப்பவர்கள், தங்களது ரத்த உறவுகளுக்கு கல்லீரல், சிறுநீரகத்தை தானமாக அளிக்கும் நடைமுறைகளை கண்காணிப்பதில் சில கட்டுப்பாடுகள் நிலவுகின்றன. இதைப் பயன்படுத்திக்கொள்ளும் இடைத்தரகர்களும், தனியார் மருத்துவமனை சார்ந்த சில நபர்களும், வறுமையில் உள்ளவர்களை உறுப்புதானம் அளிக்குமாறு மூளைச் சலவை செய்கின்றனர். அவர்களை நோயாளியின் ரத்த உறவு என அடையாளப்படுத்த போலி ஆவணங்களையும் தயார் செய்கின்றனர்.

இதுபோன்ற சம்பவம் நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையத்தில் அண்மையில் அரங்கேறியது.

இது தொடர்பாக விசாரிக்க அமைக்கப்பட்ட டாக்டர் வினித் ஐஏஎஸ் தலைமையிலான குழு, தனது அறிக்கை, பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. அதன்பேரில், திருச்சி சிதார் மருத்துவமனை மற்றும் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு இந்தச் சம்பவத்தில் தொடர்பு இருப்பது விசாரணையில் உறுதி செய்யப்பட்டது. அந்த மருத்துவமனைகளின் சிறுநீரக மாற்று சிகிச்சை உரிமம் ரத்து செய்யப்பட்டது. இதனிடையே, மகாராஷ்டிர மாநில விவசாயி களிடம் தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவர்களும், இடைத்தரகர்களும் சிறுநீரக முறைகேட்டில் ஈடுபட்டதாக மற்றொரு குற்றச்சாட்டு எழுந்தது. இதை விசாரிக்க மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை கூடுதல் இயக்குநர் தலைமையில் சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு அந்த இரு வேறு விசாரணைகளும் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டன.

இதனிடையே, சிறுநீரக மோசடி தொடர்பாக நாமக்கல் மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி.அருண்ராஜ் தெரிவித்தார். மேலும், அந்த மருத்துவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட மருத்துவர்களின் பெயர்களை அரசு வெளியிடுமா என நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி யொன்றில் அமைச்சர் அருண்ராஜிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், 'இந்த விவகாரம் தொடர்பாக சிறப்புக் குழு விசாரித்து வருவதாகவும்,

விரைவில் பெயர்கள் வெளியிடப்படும்' என்றும் தெரிவித்தார்.

### சவுதியில் லிப்ட் குழியில் விழுந்து

# படுகாயம் அடைந்த குமரி தொழிலாளி தாயகம் திரும்பினார்

## மனைவிக்கு அரசு வேலை வழங்க கோரிக்கை

**நாகர்கோவில், ஜூலை** 25, சவுதி அரேபியாவில் கட்டிட வேலை செய்து வந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளி லிப்ட் குழியில் தவறி விழுந்து படுகாயம் அடைந்த நிலையில், பலரின் முயற்சியால் விமானம் மூலம் தாயகம் அழைத்து வரப்பட்டார்.

கல்குளம் தாலுகா, குமரன்குடி வில்லேஜ், வேர்கிழம்பி ஊராட்சி, பூவன்கோடு பகுதியைச் சேர்ந்த ஆல்வின் விஜய், கடந்த 2022ம் ஆண்டு மே 19ந் தேதி கபாலத் விசா மூலம் சவுதி அரேபியாவின் தமாம் பகுதியில் வேலைக்குச் சென்றிருந்தார். கடந்த 6ந் தேதி கட்டிட பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராத விதமாக லிப்ட் குழியில் தவறி விழுந்தார். இதில் முதுகெலும்பு மற்றும் கால்களில் பலத்த முறிவு ஏற்பட்டு படுகாயமடைந்தார். உடனடியாக தமாமில் உள்ள அல் மோசாத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 5 இடங்களில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அவரை தாயகம் அழைத்து வர விமானத்தில் ஸ்ட்ரெச்சர் வசதி தேவைப்பட்டது. அதற்கான செலவை ஏற்க முடியாத நிலை ஏற்பட்டதால் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், அவரது டெல்லி அலுவலக செயலாளர் மகேஷ் ஆகியோர் இந்திய வெளியுறவுத்துறை மற்றும் ரியாத்தில் உள்ள இந்தியதூதரகத்தின் உதவியை நாடினர். மேலும், இந்திய தூதரக தன்னார்வலர்கள் மற்றும் நவயுகம் அமைப்பினர் மேற்கொண்ட தொடர் முயற்சியால் இலவச விமான டிக்கெட் ஏற்பாடு செய்யப்பட்டது. இதையடுத்து ஆல்வின் விஜய் நேற்று காலை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் திருவனந்தபுரம் விமான நிலையம் வந்தடைந்தார். அங்கிருந்து சாலோம் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஆல்வின் விஜய்க்கு மனைவியும், 2 குழந்தைகளும் உள்ளனர். விபத்தில் ஏற்பட்ட பாதிப்பால் இனி வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே, அவரது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, தமிழக அரசு அவரது மனைவிக்கு அரசு வேலை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். மீட்பு மற்றும் தாயகம் அழைத்து வரும் பணியில் உதவிய இந்திய தூதரக அதிகாரிகள், நவயுகம் அமைப்பினர், சமூக ஆர்வலர்கள், சாலோம் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் உதவிய அனைவருக்கும் ஆல்வின் விஜயின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.



கோடையிலும் வற்றாமல் கடல் போல் காட்சி அளிக்கும் சென்னை செம்பரம்பாக்கம் ஏரியை படத்தில் காணலாம்.

### வேலியே பயிரை மேய்வதா?

# தொடரும் லாக்கப் படுகொலைகள் மீது அரசு உடனடி நடவடிக்கை வேண்டும்

## பிரேமலதா விஜயகாந்த் அறிக்கை

**சென்னை, ஜூலை** 25 தொடரும் லாக்கப் படுகொலைகளை அரசு உடனடியாக தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கேட்டுக்கொண்டுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:– தூத்துக்குடி மாவட்டம் அமுதா நகர் பகுதியைச் சேர்ந்த அருணாச்சலம் (வயது 24) என்பவர் காவல்துறை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் லாக்கப் படுகொலை செய்து உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் பொதுமக்களிடையே பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து தலையில் மொட்டைஅடிக்கப்பட்ட நிலையில் அருணாச்சலம் வாக்குமூலம் அளித்துள்ள வீடியோ வெளியாகி வைரலாகி வருகிறது.

அதேபோல், அண்மையில் நாகர்கோவில் காவல் நிலையத்தில் காவலில் இருந்த மாற்றுத்திறனாளி இளைஞர் சபரிவர்மன் லாக்கப் படுகொலை செய்து உயிரிழந்ததாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு, மீண்டும் இது போன்ற லாக்கப் படுகொலை நிகழ்ந்திருப்பது மிகவும் கவலைக்குரியது.

சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய காவல் அதிகாரிகள், சட்டத்தை தன் கையில் எடுத்து லாக்கப் படுகொலை செய்வது எந்த வகையில் நியாயம்?. எனவே, இந்த வழக்கில் உண்மை நிலையை முழுமையாக வெளிக்கொணரும் வகையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும், உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு தமிழக அரசு உரிய நிவாரணத் தொகையை வழங்குவதுடன், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

அந்தக் குடும்பத்திற்கு நடந்த அநீதி யாருக்கும் நடக்கக் கூடாது என்பதற்காக, நாங்கள் ஒவ்வொரு முறையும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம். ஆனாலும், லாக்கப் படுகொலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, "வேலியே பயிரை மேய்ந்தது போல" பாதுகாக்க வேண்டிய காவல்துறையே சட்டத்தை மீறி லாக்கப் படுகொலை செய்வது கடுமையாக கண்டிக்கக்கூடியது. தமிழக முதல்வர் இதில் உடனடியாக கவனம் செலுத்தி, இது போன்ற லாக்கப் படுகொலைகள் இனி நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்தவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### ராஜபாளையம் அருகே

# ஆய்வுக்குச் சென்ற சுகாதார ஆய்வாளரை திட்டிய கடைக்காரர் மீது வழக்கு

**ராஜபாளையம், ஜூலை.**25 விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே உள்ள செட்டியார்பட்டி பேரூராட்சியில், நெகிழி பொருட்கள் பயன்பாடு மற்றும் சுகாதார ஆய்விற்கு சுகாதார ஆய்வாளர் மணிகண்டன், சுகாதார மேற்பார்வையாளர், சுகாதார பணியாளர்கள் உள்ளிட்டோர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள உணவகம், இனிபகம், பெட்டிக்கடைகளில் ஆய்வு செய்தனர். அப்போது வேல்முருகன் என்பவரின் கடையில் நெகிழி பொருட்கள் பதுக்கி வைத்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து நெகிழி பொருட்களை கைப்பற்றி ரூ. 100 அபராதம் விதித்தனர். இந்த தண்டனைத் தொகையை கட்ட முடியாதென கூறி அநாகரிகமான வார்த்தைகள் பேசி, அரசு பணியை செய்யவிடாமல் தடுத்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து செயல் அலுவலர் மோகனாமாரியம்மாள் தளவாய்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் காவல் துறையினர் அரசு பணியை செய்யவிடாமல் தடுத்தது, கொலை மிரட்டல் விடுத்து அநாகரிகமான வார்த்தைகள் பேசியது உள்ளிட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து வேல்முருகனை தேடி வருகின்றனர்.

### விக்கிரமங்கலம் அருகே

# ஊரணியில் செத்து மிதக்கும் மீன்கள்

## தொற்றுநோய் பரவும் அபாயம்

**சோழவந்தான் ஜூலை** 25 மதுரை மாவட்டம் விக்கிரமங்கலம் அருகே கல்புலிச்சான் பட்டி ஊரணியில் கடந்த மூன்று நாட்களாக மீன்கள் செத்த மிதந்து கிடப்பதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர் இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தகவல் கூறியும் செத்து கிடக்கும் மீன்களை சுத்தம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறுகின்றனர் மூன்று நாட்களுக்கு மேலாக துர்நாற்றம் வீசி வரும் மீன்களால் புற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர் அருகிலேயே அரசு துவக்கப்பள்ளி உள்ள நிலையில் ஊரணியில் செத்து கிடக்கும் மீன்களை உடனடியாக சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்

இதனால் பள்ளி மாணவர்களின் உடல் நலம் பாதிக்கும் அபாயம் இருப்பதாகவும் வேதனை தெரிவித்துள்ளனர்.

### காரியாபட்டியில்

# ஆசிரியர்களுக்கான தகுதி தேர்வினை நீக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

**காரியாபட்டி ஜூலை .25** காரியாபட்டி யில் ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி காரியாபட்டி வட்டாரக் கிளை சார்பாக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது வட்டாரத் தலைவர் காந்திராஜ் தலைமை வகித்தார் வட்டாரச் செயலாளர் முருகன் முன்னிலை வகித்தார் ஆர்ப்பாட்டத்தில் தற்போது பணிபுரியும் ஆசிரியர் களுக்கானதகுதி தேர்வினை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் என்றும் அதற்கான சட்ட திருத்தங்களை நாடாளுமன்ற கூட்ட தொடரில் மத்திய அரசு நிறைவேற்றிட மாநில அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் ஆசிரியர்களின் பணிக்காலத்தினை கணக்கிட்டு வெயிட்டேஜ் மதிப்பெண் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சங்க நிர்வாகிகள் சிவக்குமார் மாரியப்பன் ராமநாதன் ஜோதி பாப்பா மாதவன் உட்பட் 100க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பங்கேற் றனர். வட்டாரப்பொருளாளர் பட்சிராஜ் நன்றி கூறினார்.


**ADITYA BIRLA CAPITAL** ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்

**பதிவு அலுவலகம்:** இந்தியன் ரேயான் காம்பவுண்ட், வெராவல், குஜராத்-362266., **கார்ப்பரேட் அலுவலகம்:** ஆர்-டெக் பார்க், 12வது தளம், நிர்லான் காம்ப்ளக்ஸ், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ்வே அருகில், கோரேகான் கிழக்கு-மும்பை - 400063.

**"பின்னிணைப்பு- IV-A" [விதி 9 (1)-இன் நிபந்தனையைப் பார்க்கவும்]**
**அசையாச் சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் மற்றும் ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட் ஆகியவற்றுக்கு இடையே, 11.03.2024 தேதியிட்ட இணைப்புத் திட்டத்தின்படி, அகமதாபாத்தில் உள்ள தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயம் 24.03.2025 அன்று பிறப்பித்த உத்தரவில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட இணைப்பு காரணமாக, பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 9(1)-இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் உடைமை மற்றும் விற்பனை உட்பட அனைத்து சட்ட நடவடிக்கைகளும் ஆதித்யாவுக்கு மாற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மாற்றப்பட்ட நிறுவனமான பிர்லா கேப்பிட்டல் லிமிடெட். அதன்படி, இந்த அறிவிப்பு "ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்" (இனிமேல் பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர் எனக் குறிப்பிடப்படும்) மூலம் வெளியிடப்படுகிறது.

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 (2002-இன் 54)-இன் விதி 9 (1)-இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான தனியார் ஒப்பந்த விற்பனை அறிவிப்பு.333பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம் வைக்கப்பட்ட, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தின் நேரடி உடைமையை ஆதித்யா பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எடுத்துக்கொண்டுள்ளார். அந்த அடமானச் சொத்தானது, **10-மே-2024** அன்று செலுத்த வேண்டிய **ரூ. 20,34,883.26/- (இருபத்து இலட்சம் முப்பத்து நான்கு ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்று மற்றும் இருபத்து ஆறு பைசா மட்டும்)** தொகையையும், மேலும் கடன் வாங்குபவர்கள்/கூட்டுக் கடன் வாங்குபவர்களிடமிருந்து பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்குத் தொகை வசூலாகும் தேதி வரையிலான கூடுதல் வட்டி மற்றும் இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக, **2026 ஆகஸ்ட் 20** அன்று தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் "உள்ளபடியே, இருக்கும் இடத்தில்", "உள்ளபடியே, என்ன உள்ளதோ அப்படியே", மற்றும் "இருப்பது எதுவாக இருந்தாலும்" என்ற அடிப்படையில் விற்கப்படும் என்று இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாதமளிப்பவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. **ஈஸ்வர மூர்த்தி பொன்னுசாமி & திருமதி. கோகிலா)" கடன் எண் ABERDSTS000000560806.** முன்பதிவு விலை **ரூ. 11,00,000/- (பதினொரு லட்சம் ரூபாய் மட்டும்) மற்றும் முன்பண வைப்புத்தொகை (EMD) ரூ. 1,10,000/- (ஒரு லட்சம் பத்தாயிரம் ரூபாய் மட்டும்)** ஆகும். மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்தானது, இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 15 தெளிவான நாட்களுக்குப் பிறகு, **2026 ஆகஸ்ட் 20 ஆம் தேதி**யன்று தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம், A B C L மற்றும் வாங்க உத்தேசித்துள்ளவருக்கு இடையில் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளின்படி விற்கப்படும் என்று அனைத்து கடன் வாங்குபவர்கள்/உத்தரவாதம் அளிப்பவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

**அசையாச் சொத்தின் சுருக்கமான விவரம்:**

பழைய சர்வே எண் 11/1 புதிய நாதம் ஆர்.எஸ். எண் 164/18, 164/19, 164/20, 164/21, 164/23 மற்றும் 164/24, பொன்முடி கிராமம், பெருந்துறை தாலுகா, பெருந்துறை எஸ்.ஆர்.ஓ, ஈரோடு சாலை, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு-638056. கிழக்கே வடக்கு-தெற்கு தெரு மற்றும் நாதம் ஆர்.எஸ். எண் 164/22, மேற்கே பி/சந்திரனுக்கு இன்னும் செட்டில்மென்ட் கொடுக்கப்படாத வீட்டு நிலம், வடக்கே 2வது ஐட்டம் சொத்து மற்றும் நாதம் ஆர்.எஸ். எண் 164/22, தெற்கே: நாதம் ஆர்.எஸ். எண்கள் 164/25, 26, 27 மற்றும் 28.

**தேதி: 25.07.2026,** **இடம்: ஈரோடு, தமிழ்நாடு**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஆதித்யா பிர்லா கேப்பிட்டல் லிமிடெட்**

**SURYODAY A BANK OF SMILES** சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்

பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: யூனிட் எண்.1101, ஷார்தா டெரஸஸ், ப்ளாட் எண் 65, செக்டர் 11, சிபிடி பேலாபூர், புது மும்பை, மகாராஷ்டிரா - 400614

**உடைமை அறிவிப்பு**(அசையாச் சொத்துக்காக) (பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8 (1)-இன் கீழ்)

கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ் **சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்**டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவும், பிரிவு 13(2)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியும், கடனாளிகள்/கூட்டுக் கடனாளிகள்/உத்தரவாதம் அளிப்பவர் ஆகியோரை, அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து **60 நாட்களுக்குள்,** அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் கூடுதல் வட்டியையும் திருப்பிச் செலுத்துமாறு அழைப்பு விடுத்து ஒரு கோரிக்கை அறிவிப்பை வழங்கியுள்ளேன். கடனாளிகள்/கூட்டுக் கடனாளிகள்/உத்தரவாதம் அளிப்பவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடனாளிகள்/கூட்டுக் கடனாளிகள்/உத்தரவாதம் அளிப்பவர் மற்றும் பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டவர், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13 (4) மற்றும் அதன் விதி 8(1) ஆகியவற்றின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தைக் கையகப்படுத்தியுள்ளார். குறிப்பாகக் கடனாளியும், பொதுவாகப் பொதுமக்களும் அந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், அந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகை, வட்டி, மற்றும் அது தொடர்பான இதர செலவுகள், கட்டணங்கள் ஆகியவற்றை **சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்** செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு உட்பட்டதாகும். பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இல் உள்ள விதிகளுக்குக் கடனாளியின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

| வ எண். | பெயர் & முகவரி கடன் வாங்குபவர்/அடமானம் வைப்பவர்/உத்தரவாதம் அளிப்பவர்/கடன் எண். | நிலுவைத் தொகை (ரூ.) | அறிவிப்பு தேதி / உடைமை தேதி |
|---|---|---|---|
| 1 | **1) திரு. மதன் குமார் அசோகன், த/பெ அசோகன், 2) திரு. அங்குராஜ் ஏ, த/பெ அசோகன், 3) திருமதி. சிவபக்லியம் அசோகன் ஏ,க/பெ அசோகன் கடன் எண்.: 259000127785** | **ரூ.7,95,869.64/-** (ஏழு இலட்சம் தொண்ணூற்றைந்தாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஒன்பது மற்றும் அறுபத்து நான்கு பைசா மட்டும்)15.04.2026 அன்று | **28.04.2026** / **23.07.2026** |

**அசையாச் சொத்தின் விவரம்:-** சர்வே எண் 58/2, சைட் எண் கொண்ட அனைத்துப் பகுதிகளும். ஈரோடு மாவட்டம், பவானி துணைப் பதிவேடு, பவானி தாலுகா, பெரியபுலியூர் கிராமத்தில் அமைந்துள்ள, கிழக்கு முதல் மேற்கு வரை 29 அடி மற்றும் வடக்கு முதல் தெற்கு வரை 28.57 அடி நீளமும், 828.53 சதுர அடி பரப்பளவும் கொண்ட மனை எண் 78 நிலம், தற்போது பெரியபுலியூர் பஞ்சாயத்து எல்லைக்குள் வருகிறது. **இதன் எல்லைகள் பின்வருமாறு:** கிழக்கு - மனை எண் 77, மேற்கு - மனை எண் 79P, வடக்கு - பொது வீதி, தெற்கு - மனை எண் 71.

**தேதி: 25-07-2026** **இடம்: மும்பை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட் சார்பாக**

**OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.** **ஓம்காரா ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்**

**கார்ப்பரேட் அலுவலகம்:** கோஹினூர் சதுக்கம், 47வது தளம், N.C கேல்கர் மார்க், R. G. கட்கரி சௌக், தாதர் மேற்கு, மும்பை-400028. தொடர்பு எண்-9773406175.

**[இணைப்பு - IV-A] [விதி 8 (6) விதியைப் பார்க்கவும்]**
**அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு**

**நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8 (6)-இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.**

இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளி(கள்) மற்றும் இனிமேல் பெயரிடப்படும் இணை-கடனாளி(கள்) ஆகியோருக்கும் அறிவிக்கப்படுகிறது, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம்/பற்று வைக்கப்பட்டுள்ளன. எடெல்வைஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, SARFAESI சட்டம் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 31.05.2023 அன்று பிரிவு 13(2)-இன் கீழ் ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார். அதன் மூலம், கடன் வாங்கியவர்களான தண்டபானி ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் (கடன் வாங்கியவர்), திரு. ரவி குமார் தண்டானியா (கூட்டுக் கடன் வாங்கியவர்), திரு. அனில்குமார் தண்டானியா (கூட்டுக் கடன் வாங்கியவர்), திரு. பிஸ்வநாத் தண்டானியா (கூட்டுக் கடன் வாங்கியவர்) மற்றும் செல்வி. ராஷ்மி தண்டானியா (கூட்டுக் கடன் வாங்கியவர்) ஆகியோரிடம், மொத்தம் ரூ. 100 கோடி நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு அழைப்பு விடுத்தார். 30.04.2023 அன்றுள்ள நிலவரப்படி ரூ. 7,69,00,411/- (ஏழு கோடி அறுபத்தொன்பது இலட்சம் நானூற்றுப் பதினொன்று மட்டும்) தொகையுடன், அதன் மீதான திரட்டப்பட்ட வட்டி/வசூலாகாத வட்டி, ஒப்பந்த விகித(ங்களு)ன்படி, மற்றும் இதர செலவுகள், கட்டணங்கள், முதலியனவற்றையும் சேர்த்து, அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் பணம் செலுத்தப்பட வேண்டும். மேலும், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் (ஓம்காரா PS 08/2021-22 அறக்கட்டளையின் அறங்காவலராகச் செயல்பட்டு), மேலே குறிப்பிடப்பட்ட கடனாளி/கூட்டுக் கடனாளி/அடமானதாரர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள அனைத்துக் கடன்களையும், E C L ஃபைனான்ஸ் லிமிடெட் (E C L) (ஒப்படைப்பாளர்) இடமிருந்து, ஒப்படைப்பாளரின் அடிப்படைப் பிணையத்துடன் சேர்த்து, 20.07.2021 தேதியிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் மூலம் கையகப்படுத்தியுள்ளது. அதன்படி, O A R P L ஒப்படைப்பாளர்களின் பொறுப்பை ஏற்று, நிலுவைத் தொகையை வசூலிக்கவும் பிணையத்தை அமல்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை 11.05.2026 அன்று நேரடியாகத் தன்வசப்படுத்திக் கொண்டார்.

எனவே, இப்போது OARPL-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிணையம் உள்ள சொத்தை விற்க உத்தேசித்துள்ளார். SARFAESI சட்டத்தின் 13 (2) மற்றும் (4) பிரிவுகளின் கீழ் உள்ள உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி, "உள்ளபடியே", "உள்ளதை உள்ளபடியே" என்ற அடிப்படையில் இந்தச் சொத்து விற்கப்படும். பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவரான OARPL-க்கு, அந்தந்தக் கடனாளி மற்றும் உத்தரவாதமளிப்பவரிடமிருந்து (களிடமிருந்து) கீழே அந்தந்தப் பத்தியில் காட்டப்பட்டுள்ள தொகையை வசூலிப்பதற்கு, "இருக்கும் அனைத்தும்" மற்றும் "எந்தப் பொறுப்புமின்றி" என்ற அடிப்படையில். அசையாச் சொத்தின் விவரம், ஒதுக்கீட்டு விலை மற்றும் முன்பண வைப்புத்தொகை (EMD) ஆகியவற்றின் விவரங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| சொத்தின் விவரம் | முன்பதிவு விலை | EMD/ஏல அதிகரிப்புத் தொகை |
|---|---|---|
| ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு சாலை, அந்தியூர் SRO, அந்தியூர் தாலுகா, அந்தியூர் கிராமம், தாவுடுபாளையம், பழைய வார்டு 13, புதிய வார்டு 14, துணைப் பிரிவு நத்தம் Re S எண்.1324/2-இன் படி பழைய நத்தம் சர்வே எண். 374 & 375. இதில் 15636 சதுர அடி அல்லது 1452.61 சதுர மீட்டர் அல்லது 0.14.5 ஹெக்டேர் அல்லது 0.36 ஏக்கர் நிலப்பரப்பில், பழைய கதவு எண்.177 புதிய கதவு எண்.324-இல் உள்ள RCC கட்டிடம் (SC எண். G312, G 1403 மற்றும் பிற அனைத்து சலுகை உரிமைகளும்) பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளன: வடக்கே - அந்தியூர் சாலை (அண்ணாசாலை), கிழக்கே - அந்தியூர் பேரூராட்சி நீர்த்தேக்கம், தெற்கே - திருமலை மற்றும் கிருஷ்ணமூர்த்தி சொத்து, மேற்கே - வீரமாள், சண்முகம் சொத்து, கிழக்கு மேற்கு வடக்கு பக்கம். 81 அடி, கிழக்கு மேற்கு தெற்குப் பக்கம் 81 அடி, வடக்கு தென்கிழக்குப் பக்கம் 215 அடி, வடக்கு தென்மேற்குப் பக்கம் 225 அடி | **ரூ.3,51,00,000/-** | **ரூ. 35,10,000/-** |
| **மின்னணு ஏலத்தின் தேதி மற்றும் நேரம்** | **28.08.2026 அன்று காலை 11:00 மணி** | |
| **குறைந்தபட்ச ஏலத்தொகை அதிகரிப்பு** | ரூ. 1,00,000/- | |
| **சொத்தைப் பார்வையிடுதல்தேதி:** | 22.08.2026; நேரம்: காலை 11 மணி முதல் மதியம் 12 மணி வரை | |
| **பங்கேற்பு கடிதம்/KYC ஆவணம்/முன்னேற்பு வைப்புத்தொகைக்கான ஆதாரம் ஆகியவற்றைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்:** | **27.08.2026 அன்று மாலை 6:00 மணிக்குள்** | |

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநரின் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பான **http://omkaraarc.com/auction.php-**ஐயும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பிரதீக்ஷா படேலின் தொடர்பு விவரங்களையும் (தொடர்பு எண்: 9773406175, மின்னஞ்சல்: **pratiksha.patel@omkararc.com)** பார்க்கவும். ஏலதாரர் **http://www.bankeauction.com** என்ற இணையதளத்தையும் பார்வையிடலாம் அல்லது சேவை வழங்குநரான மெஸ்ஸர்ஸ். சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட் (M/s. C1 India Pvt. Ltd)-ஐத் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி உதவி எண்: +91-7291981124/25/26, உதவி எண் மின்னஞ்சல் முகவரி: **support@bankeauctions.com.** திரு. பாவிக்கு பாண்டியா, அலைபேசி: 88666 82937, மின்னஞ்சல்: **Maharashtra@c1india.com.** ஏலம் கோர விரும்புவோர், திவால் மற்றும் நொடித்துப்போதல் சட்டம் 2016-இன் பிரிவு 29A-இன் கீழ் இணங்கி, உறுதிமொழி அளிக்க வேண்டும்.

**சட்டப்பூர்வமானது சட்டப்பூர்வ வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8(6)-இன் கீழ் விற்பனைக்கான அறிவிப்பு**

இந்த அறிவிப்பு, பிணைய வட்டி (அமலாக்கம்) விதி, 2002-இன் விதி 8(6), உடன் சேர்த்து 9(1) மற்றும் நிதிச் சொத்துக்களைப் பிணையமாக்குதல் & மறுகட்டமைப்பு மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் விதிகளின் கீழ், மேலே குறிப்பிடப்பட்ட கடன் கணக்கின் கடன் வாங்கியவர்(களுக்கு) குறைந்தது 30 (முப்பது) நாட்களுக்குக் குறையாத ஒரு கட்டாய அறிவிப்பாகும். இது, மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் மின்னணு ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்தும், அவர்கள் விரும்பினால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் செலுத்தி சொத்துக்களை மீட்டுக்கொள்ளுமாறு அறிவுறுத்துவது குறித்தும் அவர்களுக்குத் தெரிவிக்கிறது. பணம் செலுத்துவதில் தவறு ஏற்பட்டால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/பிணையக் கடன் வழங்குநரின் விருப்பப்படி, பிணைய வட்டி (அமலாக்கம்) விதி, 2002-இன் விதி 8(5)-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் சொத்து விற்கப்படும்.

**தேதி: 23.07.2026** **இடம்: அந்தியூர் மாவட்டம், ஈரோடு**

**Sd/-அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட். (ஓம்காரா PS 08/2021-22 அறக்கட்டளையின் அறங்காவலராகச் செயல்படுகிறது)**